# கொஞ்சத்திலே




**அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத் 25:21).**

மேற்க்கண்ட வசனத்தின்படி ஆண்டவர் கொஞ்சத்திலே நாம் உண்மையாய் இருக்கும் பொழுது, அநேகத்தின் மேல் நம்மை அதிகாரியாக வைக்கிறார். அதாவது தேவன் நமக்கு கொடுத்திருக்கிற காரியம் எதுவானாலும், அது நம்முடைய விசுவாசம் அல்லது ஊழியம் அல்லது ஆவிக்குரிய வரங்கள் அல்லது பொருளாதார நிலைகள் அல்லது உயர் பதவிகள் என எதுவாக இருந்தாலும், அதை நாம் ஆண்டவர் எதற்காக நமக்கு கொடுத்திருக்கிறாரோ அதற்கென அதை நாம் சரியாக பயன்படுத்தும் பொழுது, அதற்குரிய நன்மைகளையும், ஆசிர்வாதங்களையும் ஆண்டவர் நமக்கு நிறைவாக (அநேகத்தின் மேல்) தருகிறவராய் இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆபிரகாம், யோசேப்பு, தானியேல் போன்றோர் ஆண்டவர் தங்களுக்கு அருளிய ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய ஆசிர்வாதங்களை, வரங்களை சரியாய் பயன்படுத்தி மேன்மையடைந்தனர். அவர்களுடைய ஆரம்பம் மிக சாதாரணமானதாய் இருந்தாலும், ஆண்டவர் பிற்காலங்களில் கொஞ்சத்திலே உண்மையாய் இருந்த அவர்களை அநேகத்தின் மேல் அதிகாரியாக / அதிபதியாக உயர்த்தினார். மேலும் புதிய ஏற்பாட்டு காலத்திலும், ஒரு சிறு கூட்டமாய் எழும்பின சபை, ஒரு சில நூற்றாண்டுகளில் உலகம் முழுவதும் பரவினது. இதற்கும் காரணம் அவர்கள் ஒரு சிறு கூட்டமாய், தங்களுக்கு அநேக துன்பங்கள் யூதர்கள் மூலமாகவும்,

புற ஜாதிகள் மூலமாகவும் வந்த பொழுதும், அந்த கொஞ்ச கால கொடிய உபவத்திரவத்தின் மத்தியில் விசுவாசத்தில் உறுதியாய் நின்று, கிறிஸ்துவை அறிவித்ததினால், அன்று அவர்கள் வாலாள் அறுபுண்டு, தலைகிழாக சிலுவையில் அறையப்பட்டு, உயிரோடு தீக்கிரையாக்கப்பட்டிருந்தாலும், இன்று 2000 ஆண்டுகளுக்கு பிறகும் அவர்களை நன்றியோடு உலக எங்கும் பரவியிருக்கிற தேவ சபை பார்க்கிறது.

எனவே நமக்கு தரப்படுகின்ற கொஞ்ச ஆசிர்வாதங்களானாலும் அல்லது நாம் கடந்து செல்ல வேண்டிய கொஞ்ச கால பாடுகளானாலும் அவற்றை ஏற்று கொண்டு, அவற்றை சரியாய் பயன்படுத்தி, நித்திய ஆசிர்வாதங்களையும், நன்மைகளையும், இளைப்பாறுதலையும் நாம் பெற வேண்டும் என்பதே இதன் சத்தியம் ஆகும். தேவன் நமக்கு தரும் ஆசிர்வாதங்கள் எல்லாம் நித்தியமானவை, பூரணமானவைகளே. அவைகள் நம்முடைய நீதியினால் அல்ல அவருடைய கிருபையினால் தரப்படுகிறவைகள். ஆகிலும் இலவசமாய் அதை பெற்றுக்கொள்ள நாம் தகுதியுடையவர்களாய் இருக்கும்படியாக ஆண்டவர் சில நேரங்களில் கொஞ்ச நன்மைகளை அல்லது கொஞ்ச பாடுகளையோ அனுமதித்து நம்மை பயிற்றுவித்து பின்பு நித்திய நன்மைகளை சுதந்தரிக்க செய்கிறார்.

**வெளி 2:10** கூறுகிறது "**நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்.**"மேலும், **ரோ 8:18** கூறுகிறது "**ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.**"ஆம் ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும், நம் இவ்வுலக வாழ்வில் தேவன் தருகிற ஆசிர்வாதங்களானாலும் சரி அல்லது பவுலுக்கு கொடுக்கபட்டது போன்ற முல்லான காரியங்கள் ஆனாலும் சரி, நம் உலக வாழ்வு ஒரு சில காலம் தான். எனவே இவ்வுலக பிரகாரமான காரியம் எதுவானாலும் அது நம்மை தொடர போவதில்லை.

ஆனால் இதன் மூலம் தான் நித்திய வாழ்விற்கென எதை தர வேண்டும் என்பதை தேவனே தீர்மானிக்கிறார். எனவே இவ்வுலகத்திலேயே தர வேண்டிய நன்மைகளுக்காகவும் சில வேளைகளில் தேவன் நம்மை பயிற்றுவிக்கிறார். அதே நேரத்தில் நித்திய வாழ்விற்கான பயிற்று தளமாய் நம் இவ்வுலக வாழ்வையும் நமக்கு தந்திருக்கிறார். ஆனால் இன்று அநேகர் நித்திய வாழ்வு என்பதை பற்றிய அறிவு இல்லாதிருப்பதும், இன்னும் சிலருக்கு அதை குறித்த அறிவு இருந்தும் அதை பெற்றுக்கொள்ள கொஞ்ச கால வாழ்வான இவ்வாழ்வை ஒரு அர்பணிப்போடு வாழ முற்படாததும் வருத்ததிற்குரிய காரியமாகும். மேலும் சில பேர் தங்கள் சுய நீதியின் மூலமாகவும், இன்னும் சிலர் பேசவும், காணவும் மாட்டாத கல்லான விக்கிரங்கள் மூலமாகவும் நித்திய ஜீவனை தேடுகின்றனர்.

ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்பதெல்லாம் ஒரு கடுகு விதை அளவு விசுவாசம் தான். ஐந்து அப்பம், இரண்டு மீன் போன்ற ஒரு காரியம் தான். நாம் ஆண்டவரை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கும் பொழுது, தேவன் நம்மை நோக்கி பத்து அடிகள் எடுத்து வைக்கிறார். ஆனால் அதே நேரத்தில் ஆண்டவருக்கு நம் இதய கதவை திறவாத

பொழுது, அதை தமது வார்த்தைகள் மூலம் தட்டி கொண்டிருப்பாரே (**வெளி 3:20**) அல்லாமல் கதவை உடைக்க மாட்டார். நாம் அவருக்கு எதிரான விசாலமான திசையில் பயணிக்கும் பொழுது நம்மை நோக்கி, இடுக்கமான பாதையானாலும் (**மத் 7:13**), வழி இதுவே இதில் நடவுங்கள் என்று நம்மை அழைப்பாரே அல்லாமல் நம்மை பலவந்தமாய் திருப்ப மாட்டார். எனவே நாம் செய்ய வேண்டியதெல்லாம், ஆண்டவர் நம்மோடு நம் இதயத்தில் இருக்கிறார அல்லது வெளியில் இருக்கிறாரா, அவர் காட்டிய பாதையில் பயணிக்கிறோமா அல்லது அதற்கு எதிராக பயணிக்கிறோமா என்பதை மாத்திரம் ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து அறிந்து சீராய் நடக்க வேண்டும். மற்றவர்களுக்கும் இதையே சொல்லவும் வேண்டும். அதையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். ஆமென், அல்லேலூயா.